புதுச்சேரி அரசு

பள்ளிக் கல்வி இயக்ககம்

செய்திக் குறிப்பு

## அரசு மேனிலைப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு சேர்க்கைக்கான விண்ணப்பம் வழங்குதல்

புதுச்சேரி, 10.08.2020

2020-21 ஆம் கல்வி ஆண்டில் புதுச்சேரி பகுதியில் உள்ள அரசினர் மேனிலைப் பள்ளிகளில் உள்ள பதினொன்றாம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 11.08.2020 முதல் அனைத்து அரசினர் மேனிலைப் பள்ளிகளிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.11-ஆம் வகுப்பில் சேர விரும்பும் மாணவ மாணவியர்கள் எந்தெந்த பள்ளிகளில் சேர விரும்புகின்றனரோ அப்பள்ளிகளில் தனித் தனியே விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை 20.08.2020 (வியாழக்கிழமை) அன்று மாலை 4.00 மணிக்குள் இணையதள மதிப்பெண் சான்றிதழ் நகலையும் (print out), குடியிருப்பு, சாதி மற்றும் வருமான சான்றிதழ்கள் (Residence, Caste and Income Certificates), மாற்று சான்றிதழ் (Transfer Certificate) மற்றும் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் ஏதேனும் இருப்பின் அதனையும் இணைத்து அந்தந்த பள்ளிகளிலேயே சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒரு மாணவர் விரும்பினால் எத்தனை பள்ளிகளில் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்.

தற்போதைய Covid - 19 நிலைமையைக் கருத்தில் கொண்டு, மாணவர்கள் குடியிருப்பு, சாதி மற்றும் வருமான சான்றிதழ்களின் பழைய நகல்களை கூட சமர்ப்பிக்கலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. விண்ணப்பப்படிவத்தினை பள்ளிக் கல்வித் துறையின் இணையதள (www.schooledn.py.gov.in) முகவரியிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அவ்விண்ணப்பங்கள் பள்ளிகளில் பரிசீலனை செய்யப்பட்டு 28.08.2020 அன்று தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு, 31.08.2020 முதல் பதினோராம் வகுப்புச் சேர்க்கை அந்தந்த பள்ளிகளிலேயே நடைபெறும்.

கடந்த ஆண்டைப் போலவே, இவ்வாண்டும் 14.06.2018 தேதியிட்ட அரசாணை எண் 16-ன் அடிப்படையிலேயே புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள அரசினர் மேனிலைப் பள்ளிகளில் உள்ள பதினொன்றாம் வகுப்பிற்கான பள்ளி அளவிலான சேர்க்கை பின்வரும் அட்டவணைப்படி அந்தந்த பள்ளிகளிலேயே நடைபெறும்.

| வ. எண் | விவரம் | தேதி |
|---|---|---|
| 1 | விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும் நாள் | 11.08.2020 |
| 2 | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்பிக்க கடைசி நாள் | 20.08.2020 |
| 3 | தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 28.08.2020 |
| 4 | அரசுப் பள்ளி மாணவர்களுக்கான மதிப்பெண் மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கலந்தாய்வு நடைபெறும் நாட்கள் | 31.08.2020 முதல் 02.09.2020 |
| 5 | அரசுப் உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான மதிப்பெண் மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கலந்தாய்வு நடைபெறும் நாள் | 04.09.2020 |
| 6 | தனியார் பள்ளி மாணவர்களுக்கான மதிப்பெண் மற்றும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கலந்தாய்வு நடைபெறும் நாள் | 08.09.2020 |
| 7 | XI வகுப்பு துவங்கும் நாள் | பின்னர் அறிவிக்கப்படும் |

விண்ணப்பங்கள் பெறவும், பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவும் வரும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் முகக்கவசம் அணியுமாறும், சமூக இடைவெளியைக் கடைபிடிக்குமாறும் வலியுறுத்தப்படுகிறது. மேலும், பள்ளிகளில் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

— Sd —

இயக்குநர்
பள்ளிக் கல்வித் துறை

இந்தச் செய்திக் குறிப்பினைத் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இயக்குநர்
பள்ளிக் கல்வித் துறை